செ.வெ.எண். 09/ஜூலை தேதி : 11.07.2016

**பத்திரிக்கைச் செய்தி**

## உலக மக்கள் தொகை தினம் -2016 விழிப்புணர்வு பேரணியை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



உலக மக்கள் தொகை தினம் -2016 விழிப்புணர்வு பேரணியை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.07.2016) தருமபுரி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலிருந்து கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்று மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி பின்னர் செய்தியாளர்களிடத்தில் தெரிவித்ததாவது :-

உலக மக்கள் தொகை 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் நாள் 500 கோடியை கடந்து விட்டது என்ற அபாயத்தை உலக மக்களுக்கு உணர்த்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை இந்நாளை "உலக மக்கள் தொகை தினம்" என்று அறிவித்தது. பெருகி வரும் மக்கள் தொகையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்கள் விழிப்புணர்வு பெற ஆண்டுதோறும் ஜூலை 11-ம் நாளை உலக மக்கள் தொகை தினமாக அனுசரித்து வருகிறோம். ஆண்கள் 25 வயதிற்கு பிறகும், பெண்கள் 21 வயதிற்கு பிறகும், திருமணம் செய்து கொண்டு ஆணோ அல்லது பெண்ணோ 1 அல்லது 2 குழந்தைகள் மட்டும் பெற்று குடும்பத்தின் அளவை கட்டுப்படுத்துவதன் மூலம் வீட்டிலும், நாட்டிலும் மகிழ்ச்சி நிலவ வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத் தரம் உயர இதுவே சிறந்த வழியாகும்.

ஆணுக்கு நிகராக பெண்கள் கல்வி பெற வேண்டும். ஆரோக்கியமான தாயால் தான் நலமான குழந்தையை பெற்றெடுக்க முடியும். தாயின் நலன் காக்கவும், குழந்தைகள் நலவாழ்வு வாழவும், சிறந்த கல்வி, வேலைவாய்ப்பும், வாழ்க்கை வசதிகள் பெற சிறு குடும்ப நெறி ஏற்பது ஒன்றுதான் சிறந்த வழியாகும். தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் உலக மக்கள் தொகை விழிப்புணர்வு பேரணி நடைபெறுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் குடும்ப நல திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இப்பேரணி அரசு கலைக்கல்லூரியில் துவங்கி மாவட்ட ஆட்சியரகம், இலக்கியம்பட்டி, பாரதிபுரம் வழியாக தருமபுரி மருத்துவக்கல்லூரியை சென்றடைந்தது.

இப்பேரணியில் தருமபுரி அரசு கலைக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் சுமார் 1500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பெண்ணிற்கு சம உரிமை கொடுப்போம், பெருகும் மக்கள் தொகையை தடுப்போம், பெண்ணை படிக்க வைப்போம், நாட்டிற்கு பெருமை சேர்ப்போம், சிறு குடும்பம் சிங்காரத் தோட்டம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

இப்பேரணியில் துணை இயக்குநர், குடும்ப நலத்துறை மரு. முல்லைசாரதி, துணை இயக்குநர் தொழுநோய் மரு. புவனேஸ்வரி, துணை இயக்குநர் காசநோய் மரு. நெடுமாறன், நல்லம்பள்ளி வட்டாட்சியர் திரு. மில்லர், அரசு கலைக்கல்லூரி முதல்வர் திரு. கண்ணன், என்.எஸ்.எஸ். அலுவலர்கள் திரு. முருகதாஸ், திரு. திருமூர்த்தி, திருமதி. தேன்மொழி மற்றும் அரசு கலைக்கல்லூரி பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.